**மே – 10**

# TNPSC துளிகள்

- ❖ சமீபத்தில், மேகாலயா மாநில அரசானது வேளாண் சார் சுற்றுலா மற்றும் கிராமப்புற வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்காக ஸ்ட்ராபெரி திருவிழாவினை நடத்தியது.
- ❖ சத்தீஸ்கர் மாநில முதலமைச்சர், நவ ராய்ப்பூரில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவின் உதவியுடன் இயங்கும் தரவு மையப் பூங்காவைத் திறந்து வைத்துள்ளார்.
- ❖ இந்தியா மற்றும் மாலத்தீவு ஆகிய நாடுகளின் கடற்படைகளானது, மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணப் (HADR) பயிற்சியை மாலத்தீவில் நடத்தி வருகிறது.
- ❖ ஆந்திரப் பிரதேச மாநில அரசானது, கிரியேட்டர் லேண்ட் எனப்படும் இந்தியாவின் முதல் பல்லூடகப் பொழுதுபோக்கு நகரத்தினை அமராவதியில் நிறுவுவதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ❖ பொது விமானப் போக்குவரத்து அமைச்சகமானது, இராஜஸ்தானின் கோட்டா மற்றும் ஒடிசாவின் பூரி ஆகிய இடங்களில் பசுந்தட (Greenfield) விமான நிலையங்களை நிறுவச் செய்வதற்கு வேண்டிய கொள்கை ரீதியான ஒப்புதலை அளித்துள்ளது.
- ❖ காசாவை "கைப்பற்றி", அதன் பிரதேசத்தை தமது அரசின் வசமாக்குவது உள்ளிட்ட ஹமாஸுக்கு எதிரான அதன் இராணுவத் தாக்குதலை விரிவுபடுத்தும் திட்டத்திற்கு இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ பழமைவாதக் கட்சித் தலைவர் பிரீட்ரிக் மெர்ஸ் ஜெர்மனி நாட்டின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ❖ ஆப்பிரிக்க உலகப் பாரம்பரியத் தினமானது, கண்டத்தின் தனித்துவமான கலாச்சார மற்றும் இயற்கைப் பாரம்பரியத்தைக் கொண்டாடுவதற்காக மே 05 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
  - ○ 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Justice for Africans and People of African Descent Through Reparations" என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## மேனிலைப் பள்ளித் தேர்வு முடிவுகள் 2025 – தமிழ்நாடு




- ❖ +2 தேர்வுகளுக்கான ஒட்டு மொத்தத் தேர்ச்சி சதவீதம் 95.03% ஆகப் பதிவாகியுள்ளது.

- இதில் மாணவ மற்றும் மாணவியர்கள் முறையே 96.70 மற்றும் 93.16 சதவீதத் தேர்ச்சி சதவீதத்தைப் பதிவு செய்துள்ளனர்.
- தனியார் பள்ளிகள் குறிப்பிடத்தக்க அளவில் 98.88% உடன் முன்னிலை வகிக்கின்றன என்ற நிலையில் அதைத் தொடர்ந்து அரசு உதவி பெறும் பள்ளிகள் 95.71% மற்றும் அரசு பள்ளிகள் 91.94% தேர்ச்சி விகிதத்தினைக் கொண்டுள்ளன.
- அரியலூர் மாவட்டம் (98.82 சதவீதம்), ஈரோடு (97.98), திருப்பூர் (97.53), கோயம்புத்தூர் (97.48), மற்றும் கன்னியாகுமரி (97.01) ஆகியவை இந்த மாநிலத்தில் மிக அதிக தேர்ச்சி சதவீதத்தைப் பெற்ற முதல் ஐந்து மாவட்டங்களில் அடங்கும்.

## 2025 ஆம் நிதியாண்டில் ஜவுளி ஏற்றுமதி

| States | Total exports Apr-24 - Mar-25 ($ million) | Mar-25 exports ($ million) | % share in selected criteria's total exports |
|---|---|---|---|
| Tamil Nadu | 7,997 | 687 | 26.8 |
| Gujarat | 5,646 | 516 | 18.9 |
| Maharashtra | 3,831 | 347 | 12.8 |
| Uttar Pradesh | 3,680 | 380 | 12.3 |
| Karnataka | 2,727 | 242 | 9.1 |

- 2024-25 ஆம் ஆண்டில் நாட்டின் ஜவுளிப் பொருட்கள் ஏற்றுமதி அதிகப் பங்கு வகிக்கும் மாநிலமாக தமிழ்நாடு விளங்கியது.
- 2024-25 ஆம் ஆண்டில், இந்தியாவின் மொத்த ஜவுளிப் பொருட்கள் ஏற்றுமதி 36.61 பில்லியன் டாலர் ஆகும்.
- இதில், தமிழ்நாட்டின் பங்களிப்பு சுமார் 7.99 பில்லியன் டாலர் அல்லது 26.81 சதவீதப் பங்காகும்.
- இதனை ஒப்பிடுகையில், 2023-24 ஆம் ஆண்டில், 34.43 பில்லியன் டாலர் மதிப்பிலான இந்தியாவின் மொத்த ஜவுளி ஏற்றுமதியில், மாநிலத்தின் பங்களிப்பு 7.15 பில்லியன் (20.78 சதவீதம்) டாலராகும்.
- குஜராத் இரண்டாவது இடத்திலும், 3.83 பில்லியன் (12.84 சதவீதம்) டாலர் மதிப்பிலான ஏற்றுமதியுடன் மகாராஷ்டிரா மூன்றாவது இடத்திலும் இதில் இடம் பெற்றன.

# தேசியச் செய்திகள்

## S-400 சுதர்சன் சக்ரா

- பாகிஸ்தான் ஆளில்லா விமானங்கள் மற்றும் எறிகணைகளைப் பயன்படுத்தி வடக்கு மற்றும் மேற்கு இந்தியாவில் உள்ள பல இராணுவப் பகுதிகளைத் தாக்க முயன்றது.
- ஒருங்கிணைந்த எதிர்ப்பு ஆளில்லா விமான அமைப்புகளின் (UAS) கட்டமைப்பு மற்றும் வான்வழிப் பாதுகாப்பு அமைப்பு S-400 ஆகியவை மூலம் இவை தடுக்கப்பட்டன.
- ரஷ்யாவினால் உருவாக்கப்பட்ட, நீண்ட தூர தாக்குதல் வரம்பு கொண்ட நிலம் விட்டு வானில் ஏவக்கூடிய இந்த ஒரு எறிகணை அமைப்பானது இந்தியாவில் 'சுதர்சன் சக்ரா' என்று அழைக்கப்படுகிறது.

- இது உலகின் மிகவும் மேம்பட்ட வான்வழிப் பாதுகாப்பு அமைப்புகளில் ஒன்றாகும்.
- இது ஆளில்லா விமானங்கள், ரேடார் கருவிக்குப் புலப்படாத விமானங்கள், சீர்வேக எறிகணைகள் மற்றும் உந்துவிசை எறிகணைகள் உள்ளிட்ட பல்வேறு வான்வழி அச்சுறுத்தல்களைக் கண்டறிந்து, கண்காணிக்கும் மற்றும் எதிர்கொள்ளும் திறன் கொண்டது.
- S-400 எறிகணையானது சுமார் 400 கிலோ மீட்டர் தூரம் வரையிலும், 30 கிலோ மீட்டர் உயரத்திலும் உள்ள வான்வழி அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளக் கூடியது.
- ஒரே நேரத்தில் சுமார் 100க்கும் மேற்பட்ட இலக்குகளைக் கண்காணிக்கக் கூடிய இந்த அமைப்பானது மிகவும் விரைந்து இடம் விட்டு இடம் நகர்த்தி பொருத்தக் கூடிய ஏவு அமைப்புகளில் பொருத்தப்பட்டுள்ளது.
- ரஷ்யா, சீனா, துருக்கி, அல்ஜீரியா, பெலாரஸ் மற்றும் சிரியா ஆகியவை இந்த S-400 அமைப்பினைக் கொண்டுள்ள பிற நாடுகள் ஆகும்.




## 21 உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் சொத்துக்கள்




- இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதி சஞ்சீவ் கண்ணா உள்ளிட்ட இருபத்தொரு உச்ச நீதி மன்ற நீதிபதிகள், உச்ச நீதிமன்றத்தின் இணையதளத்தில் தங்கள் நிதிச் சொத்துக்கள் மற்றும் கடன்கள் குறித்த தகவல்களை வெளியிட்டுள்ளனர்.
- உச்ச நீதிமன்றத்தின் 33 நீதிபதிகளில் 21 பேரின் சொத்துக்களின் பட்டியல் வெளியிடப்

பட்டுள்ளது.

- ஏப்ரல் 01 ஆம் தேதியன்று உச்ச நீதிமன்றத்தின் அனைத்து நீதிபதிகளின் ஒருமித்தத் தீர்மானத்தைத் தொடர்ந்து சொத்துக்களின் தகவல் குறித்த இப்பட்டியல் வெளியிடப் பட்டுள்ளது.
- அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளைப் போலல்லாமல், இந்த நீதிபதிகள் தங்கள் சொத்துக்கள் குறித்தத் தகவல்களை பொதுவெளிக் களத்தில் கட்டாயமாக வெளியிட வேண்டியதில்லை.
- 2019 ஆம் ஆண்டில், அரசியலமைப்பு அமர்வானது, நீதிபதிகளின் சொத்துக்கள் குறித்த தகவல்களை வெளியிடச் செய்வது என்பது பொது நலன் சார்ந்ததாக இருந்தால், அது "நீதிபதிகளின் தனிப்பட்டத் தகவல்கள் மற்றும் தனியுரிமைக்கான ஒரு உரிமையை பாதிக்காது" என்று தீர்ப்பளித்தது.

## ககன்யான் திட்டம் குறித்த புதிய தகவல்




- இந்தியாவின் முதல் மனித விண்வெளிப் பயணமான 'ககன்யான்' தற்போது அதன் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.
- இந்த முதலாவது மனித விண்வெளிப் பயணம் ஆனது, 2027 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் விண்ணில் ஏவப்பட திட்டமிடப்பட்டுள்ளது.
- இஸ்ரோ நிறுவனமானது, இந்த ஆண்டின் தொடக்கத்தில் TV-D1 திட்டம் மற்றும் முதல் ஆளில்லா விண்வெளிப் பெட்டக வாகனப் பிரிப்புச் சோதனையை மிக வெற்றிகரமாக நிறைவு செய்தது.
- இரண்டாவது விண்கல வாகனச் சோதனைத் திட்டமானது (TV-D2) 2025 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் மேற்கொள்ளப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்ற ஒரு நிலையில் அதைத் தொடர்ந்து ககன்யானின் ஆளில்லாச் சுற்றுக் கலங்களின் சோதனையானது மேற்கொள்ளப்படும்.
- மனிதர்களைச் சுமந்து செல்லும் LVM3 வாகனம், விண்வெளி வீரர் குழு வெளியேறும்

வசதி அமைப்பு மற்றும் விண்வெளி வீரர்கள் பயணிக்கும் பெட்டகம் மற்றும் சேவை வழங்கீட்டு பெட்டகம் ஆகிய அனைத்தும் தற்போது சோதனை மற்றும் அதற்கான ஒருங்கிணைப்பின் இறுதிக் கட்டங்களில் உள்ளன.

- 'ககன்யான்' ஆளில்லாச் சுற்றுக் கலமானது, இந்த ஆண்டின் பிற்பகுதியில் விண்ணில் ஏவப்பட உள்ளது.

## இக்லா-S வான்வழிப் பாதுகாப்பு அமைப்பு

- இந்தியா சமீபத்தில் ரஷ்ய இக்லா-S வான்வழிப் பாதுகாப்பு எறிகணைகளைப் பெற்று உள்ளது.
- அவை தாழ்வான உயரத்தில் பறக்கின்ற எதிரி நாட்டினரின் விமானங்கள், ஆளில்லா விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்களைத் துல்லியமாக வீழ்த்துவதற்காக என்று வடிவமைக்கப் பட்ட சிறிய, தோள்பட்டையில் சுமந்து கொண்டும் ஏவும் வகையிலான ஆயுதங்கள் ஆகும்.
- இது 6 கிலோ மீட்டர் தூரம் மற்றும் 3.5 கிலோ மீட்டர் உயரத்தில் உள்ள இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டது.




# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா-ஐக்கியப் பேரரசு இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் 2025




- மூன்று ஆண்டு கால பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு இந்தியாவும் ஐக்கியப் பேரரசும் ஒரு தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் (FTA) கையெழுத்திட்டுள்ளன.
- இந்த ஒப்பந்தமானது, 2040 ஆம் ஆண்டு முதல் இந்த இரு நாடுகளுக்கு இடையிலான

இரு தரப்பு வர்த்தகத்தினை ஆண்டிற்கு சுமார் 25.5 பில்லியன் பவுண்ட் ஸ்டெர்லிங்க் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகமானது, 2024 ஆம் ஆண்டில் மொத்தம் 42.6 பில்லியன் பவுண்ட் ஸ்டெர்லிங்க் ஆக இருந்தது.
- இந்தியாவிற்கு மேற்கொள்ளப்படும் ஐக்கியப் பேரரசின் மொத்த ஏற்றுமதிகள் 17.1 பில்லியன் பவுண்ட் ஸ்டெர்லிங்காகவும், இந்தியாவிலிருந்து ஐக்கியப் பேரரசிற்கு மேற் கொள்ளப் படும் மொத்த இறக்குமதிகள் 2024 ஆம் ஆண்டில் 25.5 பில்லியன் பவுண்ட் ஸ்டெர்லிங்காகவும் இருந்தன.
- கடந்த ஆண்டு இந்தியாவானது பிரிட்டனின் 11வது பெரிய வர்த்தகப் பங்குதார நாடாக இருந்தது.

## அல்கட்ராஸ் தீவு - மறுகட்டமைப்புத் திட்டம்

- அமெரிக்க நாட்டு அதிபர் டொனால்ட் டிரம்ப் சான் பிரான்சிஸ்கோ விரிகுடாவில் ஒரு காலத்தில் ஒரு பிரபலமான சிறை அமைந்த அல்காட்ராஸ் தீவினை மீண்டும் திறந்து விரிவுபடுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளார்.
- "தி ராக்" என்று பிரபலமாக அறியப்பட்ட அல்கட்ராஸ் தீவானது பல தசாப்தங்களாக சிறைச்சாலையாகப் பயன்படுத்தப்படவில்லை.
- முதலில் ஒரு கடற்படைப் பாதுகாப்புக் கோட்டையாக கட்டப் பட்ட இது 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஓர் ராணுவ சிறைச்சாலையாக மறுசீரமைக்கப் பட்டது.
- 1934 ஆம் ஆண்டில், இது முறையாக பெடரல் அரசின் சிறைச்சாலையாக மாற்றப் பட்டது.
- இது இறுதியில் 1963 ஆம் ஆண்டில் அட்டர்னி ஜெனரல் இராபர்ட் கென்னடியால் மூடப் பட்டது.
- இந்தத் தீவு மற்றும் சிறைச்சாலையானது தற்போது தேசியப் பூங்காக்கள் சேவை முகமையினால் மேலாண்மை செய்யப்படும் ஓர் அருங்காட்சியகமாக உள்ளது.




## யுனெஸ்கோ- நிகரகுவா விலகல்

- நிகரகுவா நாடானது ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார

அமைப்பான யுனெஸ்கோவிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளது.

- யுனெஸ்கோ அமைப்பானது, லா பிரென்சா எனும் நிகரகுவா நாட்டின் செய்தித்தாள் நிறுவனத்திற்கு பத்திரிகைச் சுதந்திரப் பரிசை வழங்கியதையடுத்து இது நிகழ்ந்து உள்ளது.
- யுனெஸ்கோ அமைப்பின் உறுப்பினர் நாடுகள் ஆனது, 1997 ஆம் ஆண்டில் உலகப் பத்திரிகைச் சுதந்திரப் பரிசை உருவாக்கின.
- பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் ஒரே ஐ.நா. பரிசு இதுவாகும்.
- முன்னதாக, நிகரகுவா நாடானது ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பிலிருந்து (FAO) விலகுவதாக அறிவித்தது.
- மேலும் நிகரகுவா நாடானது ஐ.நா. மனித உரிமைகள் சபை, சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு (ILO) மற்றும் சர்வதேசப் புலம்பெயர்வு அமைப்பு (IOM) ஆகியவற்றிலிருந்தும் விலகியது.




# பொருளாதாரச் செய்திகள்

## 2024-25 ஆம் நிதியாண்டில் கனிம (சுரங்க) உற்பத்தி

- தற்காலிகத் தரவுகளின்படி, 2024-25 ஆம் நிதியாண்டில் இரும்புத் தாது உற்பத்தியானது 289 மில்லியன் மெட்ரிக் டன் (MMT) ஆக உயர்ந்துள்ளது.
- இது 4.3% வளர்ச்சியுடன் 2023-24 ஆம் நிதியாண்டில் பதிவான சுமார் 277 MMT உற்பத்தி அளவினை விஞ்சியுள்ளது.
- இதே போல், மாங்கனீசு தாது உற்பத்தியும் 2023-24 ஆம் நிதியாண்டில் பதிவான 3.4 MMT உற்பத்திச் சாதனையை விஞ்சியுள்ளது.
- இது 2024-25 ஆம் நிதியாண்டில் 11.8% அதிகரித்து 3.8 MMT ஆக உயர்ந்துள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் நிதியாண்டில் 24 MMT ஆக இருந்த பாக்சைட் உற்பத்தி 2024-25 ஆம் நிதியாண்டில் 2.9% அதிகரித்து 24.7 MMT ஆக உயர்ந்துள்ளது.
- அதே காலக் கட்டத்தில், காரீயம் தாது உற்பத்தியானது 3.1% வளர்ச்சியுடன் 381 ஆயிரம் டன்களிலிருந்து (THT) 393 THT ஆக உயர்ந்து.
- இங்கு இரும்பு அல்லாத உலோகத் துறையில், 2024-25 ஆம் நிதியாண்டில் முதன்மை அலுமினிய உற்பத்தியானது 2023-24 நிதியாண்டின் உற்பத்தி அளவினை விஞ்சி உள்ளது.
- 2023-24 ஆம் நிதியாண்டில் 41.6 லட்சம் (LT) டன்னாக இருந்த முதன்மை அலுமினிய

உற்பத்தியானது, 2024-25 ஆம் நிதியாண்டில் 42 LT ஆக அதிகரித்துள்ளது.

- சுத்திகரிக்கப் பட்ட தாமிர உற்பத்தியில் 12.6% என்ற ஒரு வலுவான வளர்ச்சியானது பதிவானது என்ற நிலையில் 2023-24 ஆம் நிதியாண்டில் 5.09 லட்சம் டன்னாக இருந்த இது 2024-25 ஆம் நிதியாண்டில் 5.73 LT ஆக அதிகரித்துள்ளது.
- இந்தியாவானத்து 2வது பெரிய அலுமினிய உற்பத்தியாளராக உள்ளது என்பதோடு சுத்திகரிக்கப் பட்ட தாமிர உற்பத்தியில் உலகின் 10 முன்னணி உற்பத்தியாளர்களில் ஒன்றாகவும் உலகின் 4வது பெரிய இரும்புத் தாது உற்பத்தி நாடாகவும் தற்போது உள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## உலகின் அரிதான பெரிய நிலவாழ் பாலூட்டி இனத்தின் மரபணு




- உலகின் அரிதான மிகப்பெரிய நில வாழ் பாலூட்டி இனமான கடமான்/சாவோலாவின் (சூடோரிக்ஸ் நாகெடின்ஹெஹன்சிஸ்) மரபணுவை அறிவியலாளர்கள் வரைபடமாக்கி உள்ளனர்.
- சுமார் 5,000 முதல் 20,000 ஆண்டுகளுக்கு முன்பு இந்த இனங்கள் இரண்டு குழுக்களாகப் பிரிந்ததை அவர்கள் கண்டறிந்தனர்.
- அதிகபட்சக் கடைநிலைப் பனிப்பாறை பரவல் காலத்திலும் அதற்குப் பிறகுமான

காலத்தின் போது அடர்ந்த காடுகளின் பரவலில் ஏற்பட்ட சில மாற்றங்களுடன் இந்தப் பிளவு ஒன்றியது.

- சாவோலா இனமானது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் 'மிகவும் அருகிய' ஒரு இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- வியட்நாம் மற்றும் லாவோஸ் நாடுகளுக்கு இடையேயான எல்லைப்புறப் பகுதிகளில் உள்ள அன்னமைட் மலைத் தொடரின் மூடுபனி நிறைந்த மலைப் பகுதி காடுகளில் அவை காணப்பட்டன.

# மாநிலச் செய்திகள்

## வடகிழக்கின் முதல் புவிவெப்ப ஆற்றல் உற்பத்திக் கிணறு




- புவி அறிவியல் மற்றும் இமயமலை ஆய்வுகளுக்கான மையம் (CESHS) ஆனது, திராங் பகுதியில் வடகிழக்குப் பிராந்தியத்தின் முதல் புவிவெப்ப ஆற்றல் மீதான உற்பத்திக் கிணற்றை வெற்றிகரமாக அகழ்ந்துள்ளது.
- இது அருணாச்சலப் பிரதேசத்தின் மேற்கு கமெங் மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- திராங் என்பது 115°C என்ற மதிப்பிடப்பட்ட தேக்க வெப்பநிலையுடன் கூடிய நடுத்தரம் முதல் அதிகளவிலான தொகுவெப்பம் கொண்ட புவி வெப்ப மண்டலமாகும்.
- இது நேரடியானப் பயன்பாட்டுப் புவி வெப்பப் பயன்பாடுகளுக்கு வேண்டி மிகவும் பொருத்தமானதாக அமைகிறது.
- வெப்ப விசையியக்கக் குழாய்கள் மூலம் கட்டிடங்களை மிகவும் சூடாக்குவதற்கும் குளிர்விப்பதற்கும், மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் மின்சாரத்தினை உற்பத்தி செய்வதற்கும், நேரடிப் பயன்பாடுகள் மூலம் கட்டமைப்புகளை நேரடியாக வெப்பப் படுத்துவதற்கும் புவி வெப்ப ஆற்றல் பயன்படுத்தப்படுகிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## பிஜு பட்நாயக் நினைவுச் சின்னம்

- மறைந்த பிஜு பட்நாயக்கிற்காக அர்ப்பணிக்கப்பட்ட நினைவுச் சின்னமானது புது

டெல்லியில் உள்ள ரஷ்ய தூதரகத்தில் திறக்கப்பட்டுள்ளது.

- இரண்டாம் உலகப் போரின் போது நடைபெற்ற ஸ்டாலின்கிராட் என்ற போரில் பிஜு பட்நாயக்கின் பங்கைக் கௌரவிக்கும் வகையில் இந்த நினைவுச் சின்னம் அமைக்கப் பட்டுள்ளது.
- பட்நாயக் 1936 ஆம் ஆண்டில் ராயல் இந்திய விமானப்படையில் இணைந்தார்.
- அவர் மிகப்பெரும்பாலும் 'டகோட்டா' என்று பொதுவாக அழைக்கப்பட்ட டக்ளஸ் C-47 ஸ்கைட்ரெய்ன் போன்ற தளவாட விநியோக மற்றும் போக்குவரத்து விமானங்களை இயக்கினார்.
- ரங்கூனில் இருந்து பிரிட்டிஷ் அதிகாரிகளை வெளியேற்றும் நடவடிக்கையில் அவர் முக்கியப் பங்கு வகித்தார்.
- சீனாவின் சியாங் காய் ஷேக்கிற்கு உதவுவதற்காக பட்நாயக் தளவாட விநியோக விமானங்களையும் இயக்கினார்.
- 1997 ஆம் ஆண்டில் அவர் உயிரிழந்த போது, அவரது சவப்பெட்டியானது இந்தியா, இந்தோனேசியா (அதன் சுதந்திரப் போராட்டத்திற்கு அவர் உதவியிருந்தார்) மற்றும் ரஷ்யா ஆகிய மூன்று வெவ்வேறு நாடுகளின் தேசியக் கொடிகளால் மூடப்பட்டு இருந்தது.




# முக்கிய தினங்கள்

## சர்வதேச பேறுகால மருத்துவப் பணியாளர்கள் தினம் 2025 - மே 05

- உலகெங்கிலும் உள்ள பெண்களுக்கு பாதுகாப்பான கர்ப்பம், அதிகாரமளிக்கப்பட்டப் பிரசவ வசதிகள் மற்றும் மரியாதைக்குரிய பேறுகாலப் பராமரிப்பை மிகவும் நன்கு உறுதி செய்வதில் பேறுகால மருத்துவப் பணியாளர்கள் / மருத்துவச்சிகள் வகிக்கும் முக்கியப் பங்கை இத்தினம் எடுத்துக் காட்டுகிறது.

- இது 1992 ஆம் ஆண்டில் சர்வதேசப் பேறுகால மருத்துவப் பணியாளர்கள் கூட்டமைப்பு என்ற அமைப்பிபினால் (ICM) தொடங்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு: Midwives: Critical in Every Crisis என்பதாகும்.




## உலக கை சுகாதார தினம் 2025 - மே 05

- சுகாதாரத் துறையில் முறையான கை சுகாதார நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் என இது ஆண்டுதோறும் நடத்தப்படும் உலகளாவிய பிரச்சாரம் மாகும்.
- இத்தினமானது, 2019 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பினால் (WHO) நிறுவப் பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "WHO SAVE LIVES: Clean Your Hands" என்பதாகும்.




## உலக கேலிச் சித்திர நிபுணர்கள் தினம் 2025 - மே 05

- 1990 ஆம் ஆண்டுகளில், தேசிய கேலிச் சித்திர நிபுணர்கள் சங்கம் இந்தத் துறையில் உள்ள ஒவ்வொரு கேலிச் சித்திர நிபுணர்களையும் கொண்டாடுவதற்காக இந்த நாளை

அறிவித்தது.

- சமூகத்தில் கேலிச் சித்திரங்களின் முக்கியத்துவத்தை ஊக்குவிப்பதையும், கலைத் திறன் மற்றும் வாசிப்பை ஊக்குவிப்பதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- 1946 ஆம் ஆண்டில், இங்கிலாந்தில் தேசியக் கேலிச் சித்திர நிபுணர்கள் சங்கம் (NCS) நிறுவப் பட்டது.
- முதன்முதலில் வெளிவந்த "தி யெல்லோ கிட்" எனப்படுகின்ற ஒரு குறும்புக்கார கேலிச் சித்திரக் கதாபாத்திரத்தினை மிக நன்கு அங்கீகரிக்கும் விதமாக இந்தத் தேதியானது தேர்ந்தெடுக்கப் பட்டது.
- இது 1895 ஆம் ஆண்டு மே 05 ஆம் தேதியன்று நியூயார்க் வேர்ல்ட் என்ற செய்தித்தாளில் வெளி வந்தது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★